செ.வெ.எண்: 367 நாள்: 20.5.2020

**முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.5.2020) புதுக்கோட்டை நகர்மன்றத்தில் முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மற்றொருபுறம் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளதையொட்டி பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்களையும், கட்டுமான அமைப்பசாரா தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசு முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு நிவாரண தொகை வழங்கிட அறிவித்துள்ளது.

இன்றையதினம் புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா சார்பில் 50 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான மளிகைப் பொருட்களும், புதுக்கோட்டை நகராட்சியின் சார்பில் கபசுர குடிநீர் பொடி, முகக்கவசம், சத்து மாத்திரைகள், கிருமிநாசினி திரவங்கள் உள்ளிட்ட தொகுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை வெளி மாநிலம், வெளி மாவட்டங்களில் இருந்து வருகைபுரிந்தவர்கள் 3,179 பேர். இவர்களை 14 நாட்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தி கண்காணிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெளி மாநிலத்தில் இருந்து வருபவர்களை தங்க வைத்து கண்காணித்திட அரசு மற்றும் தனியார் கட்டிடங்களில் மாவட்டத்தில் 23 இடங்களில் 179 பேர் தங்கவைக்கப்பட்டு, அவர்களுக்கு உரிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்றையதினம் வரை கொரோனா தொற்றால் சிகிச்சை பெற்று வந்த 7 நபர்களில் 6 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பி உள்ளனர். இந்நிலையில் மகாராஷ்டிரா மாநிலத்தில் பணிபுரிந்த புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நேற்றையதினம் வருகைபுரிந்தவர்களில் 4 நபர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. ஆகமொத்தம் தற்போதைய நிலவரப்படி புதுக்கோட்டையை சேர்ந்த 5 நபர்களுக்கு பழைய அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**(இதுதவிர மகாராஸ்டிராவில் இருந்து வருகைபுரிந்த சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த ஒரு நபரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு புதுக்கோட்டையில் சிகிச்சை பெற்று வருகிறார்.)**

இந்நிகழ்வில் பாரத ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மண்டல மேலாளர் வரதராஜன், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, வட்டாட்சியர் முருகப்பன் ஆகியோர் உடனிருந்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**